# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

# OS.No.53/2024

dated : 24.06.2025

P.W.1

Name கிருஷ்ணம்மாள் என்ற ராஜலட்சுமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>14, 89, 90 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அனைஞ்சிப்பிள்ளை திருமணமானவர் அவர் கணவர் பெயர் நிறைகுளத்தான். நிறைகுளத்தானின் மற்றொரு மனைவியின் பெயர் வள்ளியம்மாள். அனைஞ்சிப்பிள்ளையின் வாரிசு சான்றை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வள்ளியம்மாளின் மகள் சண்முகத்தாய் திருமணமாகாமல் இறந்துபோனார். மேற்படி சண்முகத்தாயின் வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிறைகுளத்தானின் மனைவி பெயர் வள்ளியம்மாள் என்று வழக்குரையில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். நிறைகுளத்தானுக்கு இரண்டு மனைவிகள் என்று வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். செல்லமருதம்மாள், சின்ன செல்ல மருதம்மாள் இருவரும் இறந்துபோனார்கள் அவர்களது வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நவநீதகிருஷ்ண மருதப்பன் என்பவர் பெரிய கிருஷ்ணம்மாள் மறைவிற்கு பின்னர்தான் செல்ல மருதம்மாள் என்பவரை திருமணம் செய்துள்ளார். மருதையா,

நிறைகுளத்தான், சௌந்தரம், செல்லத்தாய் ஆகியோரும் நானும் செல்ல மருதம்மாளின் வாரிசுகள். என் தாயாரின் வாரிசு சான்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே 2ம் பிரதிவாதியுடன் செய்து கொண்ட பாகப்பிரிவினையின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி 14ம் பிரதிவாதிக்கு அவருக்கு கிடைத்த பாகப்பிரிவினை சொத்தை கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் 2ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றும் அதனடிப்படையிலேயே 2ம் பிரதிவாதி 14ம் பிரதிவாதிக்கு ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் கொடுத்த பகுதி போக மீதி சொத்தை 2ம் பிரதிவாதி ஆறுமுகம்சேர்வை, காளியம்மாள், கருப்பாத்தாள், காளிச்சாமி சேர்வை ஆகியோரிடமிருந்து 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்களையும் மின்வாரியத்திற்கு கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனவே 1 , 2 பிரதிவாதிகள் மோசடியாக பட்டா ஏற்படுத்திக் கொண்டதாக கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. 14ம் பிரதிவாதிதான் பாகம் கேட்டு மறுத்துவிட்டதாக கூறியிருப்பது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகளும் நானும் வழக்குச் சொத்துக்களை கூற்றாக அனுபவித்து வருவதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்துக்களில் 1 முதல் 5 பிரதிவாதிகளுடன் சேர்த்து தீர்வையும் செலுத்தி வருவதாக கூறுவது வழக்கிற்காக

கூறும் பொய் என்றால் சரியல்ல. நான் தீர்வை செலுத்த தனியே பணம் கொடுக்கவில்லை சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை கொண்டு தீர்வை செலுத்தி வருகிறார்கள். எனக்கு 1982 ல் திருமணம் ஆனது. தமிழ்நாடு திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் முன்பே திருமணம் ஆகிவிட்டதால் பொது குடும்ப சொத்தில் நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் திருமணமாகி பொது குடும்பத்தை விட்டு விலகிச் சென்றுவிட்டதால் ஒருபோதும் வழக்குரை சொத்தை கூட்டாக அனுபவித்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. 14 ம் பிரதிவாதி ஊத்துமலை கிராம மக்களின் நன்மைக்காகவும் மின்வாரியத்தின் பயன்பாட்டிற்காகவும் 2 ம் பிரதிவாதியின் சொத்து என தெரிந்து நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளார் என்றும் 14 ம் பிரதிவாதியின் கிரையம் செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. பொதுசுகாதார துறைக்காவும் பொது மக்களின் நன்மைக்காவும் 2 ம் பிரதிவாதி அரசுக்கு வா.சா.ஆ-74 ல் கண்ட சொத்தை தானம் கொடுத்துள்ளார் என்றும் அவ்வாறு தானம் பெற்ற சொத்தை பொது சுகாதார துறை சுவாதீனம் எடுத்து அனுபவித்து வருவதால் அதுகுறித்து தற்போது கேள்வி எழுப்ப இயலாது என்றால் சரியல்ல. நான் 2 ம் பிரதிவாதி சட்டப்பூர்வ காலத்திற்கும் மேலாக அனுபவித்து வந்து கிரையம் மற்றும் தானம் கொடுத்த சொத்துக்களில் தற்போது உரிமைகோர இயலாது என்றும் வழக்கு காலவரையறைக்குள் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது**